பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 01 சனிக்கிழமை (16-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 20

# ஸ்ரீலங்காவின் அரச படைகளுக்கு இந்தியா உதவுவதற்கு எதிர்ப்பு!

## தமிழக இளைஞர் ஆர்ப்பாட்டம்

சென்னை, டிசம்பர். 16

ஸ்ரீலங்காவின் அரசாங்கப் படைகள் அங்கு வாழும் தமிழர்களைக் கொன்று குவித்து வருகின்றன. ஆகையால் இந்திய அரசு ஸ்ரீலங்கா படைகளுக்கு எந்த விதத்திலும் உதவக்கூடாது. தான் வழங்கும் சகல உதவிகளையும் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு கோரி தமிழக இளைஞர் முன்னணியினர் சென்னையில் உள்ள இலங்கை வங்கிக் கிளைக்குள் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வழமையாக நடக்கும் ஆர்ப்பாட்டப் போராட்டங்களுக்கு முற்றிலும் புதிய வகையில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

சென்னையில் உள்ள இலங்கை வங்கிக் கிளையை இழுத்து மூடுவது ஆர்ப்பாட்டத்தின் பிரதான அங்கமாக இருந்தது.

சென்னையில் உள்ள இலங்கை வங்கிக் கிளைக்குள் நுழைந்த தமிழ்நாடு இளைஞர் முன்னணியைச் சேர்ந்த எழுபதுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் தமிழக இளைஞர் முன்னணியின் பொதுச் செயலாளர் ச. யோகநாதன் என்பவரும் அடங்கி உள்ளார். என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இலங்கை வங்கிக் கிளை மூடப்படவேண்டும் என்று இளைஞர்கள் கோஷமிட்ட

6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் நேற்று பரவலாக ஷெல் வீச்சு

சாவகச்சேரி, டிச. 16

தென்மராட்சி மக்கள் குடியிருப்புக்கள்நோக்கி ஸ்ரீலங்கா படையினர் ஆனையிறவு முகாமில் இருந்தும், பலாலி தளத்தில் இருந்தும் ஒரே நேரத்தில் அகோர ஷெல் தாக்குதலை நேற்று மேற்கொண்டனர் எழுதுமட்டுவாள் பகுதியிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

நேற்று நண்பகலுக்கு சற்றுப் பின்னராக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலால் மக்கள் மிகுந்த அச்சமடைந்தனர்.

இதே வேளை — பலாலி படைத்தளத்தில் இருந்து வடமராட்சிப் பகுதியை நோக்கியும் நண்பகல் நேரம் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வலிகாமம் மக்கள் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்துள்ள வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகள் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிவருகின்றன.

(இ-3-173-13)

## முற்றுகையிடப்பட்ட நகரம் போல் கொழும்பு

கொழும்பு, டிச. 16

கொழும்பு முற்றுகையிடப்பட்ட ஒரு நகரம் போன்று காட்சி அளிக்கிறது. கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளால் இரவில் வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் கொழும்பில் எந்நேரமும் தாக்குதல் நடத்தலாம் என்று பாதுகாப்புப் படையினர் மத்தியில் அச்சம் நிலவுகிறது என்றும் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார். [இ-6]

## படைமுகாம்கள் மீது ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்த புலிகள் திட்டம்

கொழும்பு, டிச. 16

பாதுகாப்புப் படைகளின் முகாம்களின் மீது ஒரேநேரத்தில் பெரும் தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருகின்றனர்.

இப்படி இராணுவப் பேச்சாளர் கூறியதாக ''வெரித்தாஸ்'' வானொலி தெரிவித்தது.

யாழ். நகரை இழந்த பின்னர் விடுதலைப்புலிகள் வடக்கு - கிழக்கு பகுதிகளில் மறைந்துள்ளதாக இராணுவம் கருதியதாகவும் —

கடந்த சில தினங்களாக அவர்கள் மீண்டும் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளதால் இராணுவம் மிரண்டுபோயுள்ளதாகவும்— அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தை ஆயுதப்படையினரிடம் இழந்துள்ள விடுதலைப் புலிகள் புதிய தாக்குதல்களை படையினருக்கு எதிராக மேற்கொள்ள திட்டமிட்டு வருகின்றனர் என்று பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்ததாக நேற்றைய கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றும் செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய தாக்குதலை பலமான முறையில் மேற்கொள்ள நாசகார ஆயுதங்களை கடல் மார்க்கமாக வடக்கு- கிழக்கு பகுதிகளுக்கு கொண்டு வர விடுதலைப் புலிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்றும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் தங்குவதற்கு இன்னும் அனுமதி இல்லை

### அபாயகரமான பகுதி

கொழும்பு, டிச. 16

யாழ்ப்பாணத்தில் படையினர் கைப்பற்றிய பகுதிகளில் நீர்வேலி, அச்சுவேலி, திருநெல்வேலி. கோண்டாவில், மாதகல், அரியாலை, கொழும்புத்துறை, கோப்பாய், கல்வியன்காடு, நல்லூர், சுண்டிக்குழி, உரும்பிராய் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியேற முடியும் என்றும் —

அபாயகரமான பகுதிகள் என்று கருதப்படும் ஏனைய பகுதிகளுக்கு இன்றும் இரண்டொரு நாட்களில் அவர்கள் செல்ல முடியும் என்றும் அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என தினமின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்.நகரில் படையினரிடம் சிக்கியவர்கள் அச்சுவேலி அல்லது இளவாலையில் தங்கவைக்கப்பட்டிருக்கலாம் மென்று கூறப்படுகிறது. [இ-3]

## யாழ். பல்கலைக்கழகம் சிதைவுற்ற நிலையில்

### பி.பி.ஸிக்கு சந்திரகாந்தன் தகவல்

லண்டன், டிச. 16

''கடந்த ஒரு மாதகாலமாக யாழ். பல்கலைக்கழகம் சின்னாபின்னமாக்கப்பட்டு முற்றாக சிதைந்து அழிக்கப்பட்டுள்ளது.''

பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் இப்படிக் கூறினார் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் வண. சந்திரகாந்தன்.

அவர் மேலும் கூறியதாவது:-

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி துயரம் அளிக்கும் நிலைக்குள்ளாகியுள்ளது.

பல்கலைக்கழகம் மட்டுமல்ல, அனைத்துக் கல்விக் கூடங்களுமே இன்று ஸ்தம்பித நிலையில் உள்ளன. கல்வி இல்லாத நிலையில் ஆசிரியர்களும், மாணவர்களும் சிதறி வாழும் நிலை இருந்துவருகிறது.

வருங்காலக் கல்வியை இது பயங்கரமாகப் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை என்றார். (இ-3)

## தமிழ் கட்சிகள் அரசுடன் சேர்ந்து வாக்களிப்பு

கொழும்பு, டிச. 16

நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாவது மதிப்பீடு நேற்று 47 வாக்குகளால் நிறைவேறியது.

127 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 80 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

ஈ. பி. டி. பி, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தன.

ஐ. தே. க, இலங்கை முற்போக்கு முன்னணி ஆகியன எதிர்த்து வாக்களித்தன. [இ-3]

## தமிழ் எம். பிக்கள் பதவி துறக்கவேண்டும்

### நெடுமாறன் கோரிக்கை

சென்னை, டிச. 16

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவிகளை துறந்து வெளியேற வேண்டும்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப.நெடுமாறன் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர்கள் இன்னமும் அங்கம் வகிப்பது சரியா என்றும் அவர் கேள்வி

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் 80 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படும்

## புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை

சாவகச்சேரி, டிச. 16

இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிகளுக்குச் செல்லும் குடும்பங்களை மீளக்குடிய மர்த்துவதற்காக வன்னிப் பகுதியில் 80 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருகிறது.

இதன் முதற்கட்டமாக பத்தாயிரம் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு பத்தாயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

இந்த வீடுகளில் 5 ஆயிரம் வீடுகள் கிளிநொச்சி மாவட்டத்திலும் —

3 ஆயிரத்து 500 வீடுகள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் —

750 வீடுகள் மன்னார் மாவட்டத்திலும் —

750 வீடுகள் வவுனியா மாவட்டத்திலும் அமைக்கப்படும்.

இந்த வீடுகளை அமைப்பதற்கான இடங்களை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், காணித் திணைக்கள உத்தியோகத்தர்கள், குடியேற்ற உத்யோகத்தர்கள் இணைந்து தெரிவு செய்துள்ளனர்.

இந்தப் பணிக்காக 30 ஆயிரத்து 194 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-7)


### கைத்தொழிலாளர்கள் கவனத்திற்கு

தற்போதைய இடம் பெயர்வைக் கருத்தில் கொண்டு, தமது கைத்தொழில்களை வன்னிக்கு நகர்த்த உத்தேசித்துள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் தன்னாலான சகல உதவிகளையும்

### தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்

வழங்குகின்றது

★ பொருள்களை இடம் மாற்றும் வசதிகள்
★ தொழிற்சாலைக்கான இடவசதி
★ ஒட்டுசுட்டானுக்கு அண்மித்த பகுதிகளில மின் வசதியுடன் கூடிய இடவசதிகள்
★ வேறு கட்டுமான வசதிகள்

இவை போன்ற வசதிகள் வழங்கப்பட்டு வருவதால், தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்த அனைத்துக் கைத்தொழில் நிறுவனங்களையும், புதிதாகத் தொடங்கவுள்ள நிறுவனங்களையும், நல்லெண்ணெய் உற்பத்தியாளர்களையும் கச்சாய் வீதியிலுள்ள தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்
மே/பா. நி. அருந்தவபாலன்,
(திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துக்கு அருகில்)
கச்சாய் வீதி,
கொடிகாமம். (சி-3146)

### தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவன அறிவித்தல்

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்துள்ள சகல கைத்தொழில் நிறுவன உரிமையாளர்களையும் புதன்கிழமை (20-12-1995) காலை 10 மணிக்கு, தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்
மே/பா. நி. அருந்தவநாயகம்,
(திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் அருகில்)
கச்சாய் வீதி,
கொடிகாமம்.
(சி/3147)

### மில்க்வைற் நீல சோப்

மில்க்வைற் நீல சோப் விற்பனையாகிறது.
மேலுறைகளுக்கு அழகிய
கைலேஞ்சி, துவாய்கள்
இனாமாக வழங்கப்படும்.

தொடர்பு:-
க. கனகராசா
மில்க்வைற்
கண்டி வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை. (39629)

### தவறிவிட்டது

கனகம்புளியடிச் சந்தியில் க. யோகேஸ்வரன் என்பவரின் கறுப்பு கம்பஸ் பாக், உணவு முத்திரை, டயறி, உடுப்புகள் என்பனவற்றுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்.

திரு. ந. சின்னத்துரை
அந்தனத்திடல்,
கப்பூது. (39530)


# வவுனியா - மன்னார் வீதியில் தேடுதல்

கொழும்பு டிச. 16

வவுனியா — மன்னார் வீதியில் பாதுகாப்புப் படையினரும் பொலீஸாரும் கடந்த சில தினங்களாகத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் இருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல முயன்ற ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் —

வவுனியா — மன்னார் வீதியில் 10 மைல் தொலைவில் உள்ள செட்டிக்குளம் பகுதியில் படையினரும், பொலீஸாரும் தேடுதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இடம் பெயர்ந்த மக்களுக்கு நோர்வே உதவி

கொழும்பு, டிச. 16

நோர்வே அரசாங்கம் வடக்கில் இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவையும் ஏனைய அத்தியாவசிய சேவைகளையும் வழங்க 7கோடியே 5 லட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் நோர்வே தூதரகத்தின் பிரதம அதிகாரி ஒஸ்கா ஒஸ்காஸினும் நிதி அமைச்சின் பதில் செயலாளர் லியனகேயும் கைச்சாத்திட்டனர்.

## மக்கள் நலன்புரி சங்கம் முதலுதவி பயிற்சி

சாவகச்சேரி, டிச. 16

அனைவருக்கும் முதலுதவிப் பயிற்சியை வழங்க மக்கள் நலன்புரிச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஷெல், மற்றும் விமானத் தாக்குதல் அனர்த்தங்களின் போது வீணான உயிரிழப்புகளைத் தவிர்த்துக் கொள்ள முதலுதவிப் பயிற்சியை அனைவரும் பெற்றுக்கொள்வது அவசியம் என்றும் –

அதற்கு வசதியாகப் பின்வரும் இடங்களில் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும் மக்கள் நலன்புரிச் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

★ முற்பகல் 10 மணி முதல் 12 மணிவரை சாவகச்சேரி மக்கள் வங்கிக்கு அருகில் உள்ள அலுவலகம்.

★ வடமராட்சி தேவரையாழி இந்துக் கல்லூரி

★ கைதடி சித்த மருத்துவ ஆஸ்பத்திரி.

★ நுணாவில் அ. த. க பாடசாலை. (ஐ)

## கரவெட்டியில் வயிற்றோட்டம் கட்டுப்பாட்டில்

கரவெட்டிப் பகுதியில் தீவிரமாகப் பரவிவந்த வயிற்றோட்ட நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக தலைமை சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

இப் பகுதிகளில் பலருக்கு வயிற்றோட்ட நோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக சுகாதாரப் பரிசோதகர்கள் இப்பகுதியிலுள்ள கிணறுகளுக்கு உடனடியாக குளோறின் இட்டதுடன் வயிற்றோட் நோயினால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக வைத்திய சிகிச்சையை வழங்கினர் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-173)

## போலியோ தடைமருந்து

சாவகச்சேரி, டிச. 16

தென்மராட்சி பச்சிலைப்பள்ளி அடக்கிய சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நவம்பர் மாதம் 4ஆம் திகதி 36 ஆயிரத்து 214 குழந்தைகளுக்கும், டிசம்பர் மாதம் 9ஆம் திகதி 32 ஆயிரத்து 517 குழந்தைகளுக்கும் போலியோ தடைமருந்து வழங்கப்பட்டுள்ளது. (இ-18)

## புலோலியில் 6 பேருக்கு கண் சத்திர சிகிச்சை

வடமராட்சி, டிச. 16

புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் அமைந்துள்ள கிளினிக் அறையில் கடந்த புதனன்று ஆறு பேருக்கு கண்ணில் 'கற்றாக்' சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

யாழ். றோட்டறிக் கழகத்தினதும், பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினதும் ஆதரவில் இக்கண் சத்திர சிகிச்சை இடம் பெற்றது.

யாழ். ஆஸ்பத்திரி கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாஸன் இச்சிகிச்சையை மேற்கொண்டார்.

போதிய வசதிகள் இல்லாத அறை ஒன்றில் வைதே கண் சத்திரசிகிச்சையை டாக்டர் குகதாஸன் நடத்தினார்.

ஏற்கனவே மந்திகை ஆஸ்பத்திரி பற்சிகிச்சைப் பிரிவில் வைத்து இருவருக்கு கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-173)

## தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை

கிளிநொச்சி, டிச. 16

கிளிநொச்சியில் உள்ள குளங்களில் தண்ணீர் குறைந்தளவே உள்ளதால் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் கோரி உள்ளார்.

இந்த வருடம் மிகக் குறைந்தளவு [illegible] பெறப்பட்டிருப்பதால் பெரும்பாலான குளங்களில் குறைந்தளவு தண்ணீரே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தவேண்டுமென்று தெரிவித்துள்ள கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர், அதற்கான நடைமுறைகளையும் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளார். [இ-7]


### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை

வெற்றிடங்களை நிரப்பும் பட்டியல்

### புதிய அனுமதிகள் 1994/95

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் முகாமைத்துவ கற்கை நெறிக்கும், வர்த்தகக் கற்கை நெறிக்கும் தெரிவு செய்யப்பட்டோரினது பெயர்ப்பட்டியல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இப் பெயர்ப்பட்டியல்களை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் உப அலுவலகத்தின் முன்பாகவுள்ள விளம்பரப் பலகையில் பார்வையிட்டுத் தங்களது பதிவைப் பின்வரும் ஆவணங்களுடன் 1996-01-31 ஆம் திகதிக்கு முன்னராக கிழமை நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதி ஒன்றுடன் போட்டோ பிரதி)
2. பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப் பிரதி ஒன்றுடன் போட்டோ பிரதி)
3. தேசிய அடையாள அட்டை
4. புகைப்படம் - கறுப்பு வெள்ளை 2''X2½'' - 8பிரதிகள்
5. கட்டணம் ரூ. 175/- (புவியியலை ஒரு பாடமாக கற்க விரும்புவோர் ஆய்வு கூடக்கட்டணமாக மேலதிகமாக ரூ. 100/- செலுத்துதல் வேண்டும்)
6. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட கடிதம்

மேலும், கலைக் கற்கை நெறிக்கான (விசேட பாடம்) அனுமதிகள் பற்றிய விளம்பரம் ஏற்கனவே பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டவாறு தங்களது பெயர்க்ளைப் பதிவு செய்யத் தவறியோரும் 1996-01-31 ஆம் திகதிக்கு முன்னராக மேற் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
(சி/3148)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்பு நிதிக்கடன் [illegible] பு பெறுவோரின்
# கடன் பத[illegible] இலக்கங்கள்

தமிழீழ மீட்புநிதிக்கடலில் 1995 ஆம் ஆண்டு மீளளிப்புக்காக மூவாயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என தமிழ்ழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறித்துள்ளது.

நேற்றைய உதயனில் காரை நகர், வேலணை யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், மானிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, வெளியகல்வு ஆகிய பிரிவுகளில் மீட்பு நிதிக்கடன் மீளப்பெறுவோரின் பத்திர இலக்கங்கள் பிரசுரமாகி இருந்தன.

இன்று இறுதியாக சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரிவுகளில் மீட்புநிதிக் கடன் மீளளிப்புப் பெறுவோரின் கடன் பத்திர இலக்கங்கள் பிரசுரமாகி உள்ளன விவரம் வருமாறு;-

(நேற்றைய தொடர்ச்சி)

## சாவகச்சேரி

யா/சா

| | | |
|---|---|---|
| 30 | 31 | 40 |
| 73 | 79 | 80 |
| 92 | 109 | 132 |
| 136 | 170 | 222 |
| 232 | 258 | 270 |
| 290 | 291 | 301 |
| 352 | 401 | 408 |
| 409 | 436 | 440 |
| 469 | 487 | 496 |
| 501 | 600 | 620 |
| 628 | 679 | 711 |
| 761 | 799 | 812 |
| 813 | 836 | 861 |
| 899 | 904 | 932 |
| 935 | 938 | 968 |
| 970 | 1047 | 1083 |
| 1169 | 1230 | 1239 |
| 1286 | 1293 | 1300 |
| 1306 | 1348 | 1379 |
| 1455 | 1488 | 1521 |
| 1615 | 1818 | 1834 |
| 1842 | 1880 | 1905 |
| 1906 | 1921 | 1940 |
| 1944 | 1951 | 2033 |
| 2045 | 2148 | 2153 |
| 2157 | 2166 | 2176 |
| 2221 | 2223 | 2286 |
| 2295 | 2319 | 2338 |
| 2342 | 2359 | 2376 |
| 2421 | 2468 | 2523 |
| 2526 | 2554 | 2598 |
| 2599 | 2631 | 2666 |
| 2692 | 2696 | 2752 |
| 2823 | 2826 | 2834 |
| 2841 | 2871 | 2898 |
| 2933 | 2952 | 3003 |
| 3009 | 3016 | 3021 |
| 3023 | 3103 | 3116 |
| 3151 | 3178 | 3180 |
| 3215 | 3218 | 3219 |
| 3232 | 3236 | 3249 |
| 3279 | 3391 | 3402 |
| 3407 | 3443 | 3480 |
| 3498 | 3515 | 3590 |
| 3676 | 3698 | 3712 |
| 3715 | 3805 | 3823 |
| 3827 | 3863 | 3868 |
| 3886 | 3943 | 3949 |
| 3954 | 3956 | 3975 |
| 3992 | 3994 | 3996 |
| 3998 | 4013 | 4018 |
| 4020 | 4042 | 4084 |
| 4086 | 4087 | 4098 |
| 4172 | 4233 | 4239 |
| 4243 | 4266 | 4268 |
| 4290 | 4296 | 4297 |
| 4324 | 4326 | 4374 |
| 4378 | 4384 | 4394 |
| 4402 | 4411 | 4419 |
| 4439 | 4451 | 4479 |
| 4536 | 4553 | 4656 |
| 4718 | 4756 | 4803 |
| 4811 | 4843 | 4872 |
| 4885 | 4894 | 4955 |
| 5000 | 5015 | 5028 |
| 5030 | 5055 | 5068 |
| 5073 | 5144 | 5150 |
| 5203 | 5225 | 5226 |
| 5255 | 5256 | 5291 |
| 5310 | 5360 | 5375 |
| 5414 | 5423 | 5493 |
| 5500 | 5530 | 5543 |
| 5628 | 5732 | 5772 |
| 5783 | 5806 | 5830 |
| 5846 | 5856 | 5869 |
| 5924 | 5926 | 5955 |
| 5973 | 5978 | 6006 |
| 6025 | 6046 | 6048 |
| 6066 | 6078 | 6095 |
| 6134 | 6218 | 6231 |
| 6266 | 6292 | 6376 |
| 6401 | 6437 | 6487 |
| 6512 | 6514 | 6519 |
| 6532 | 6596 | 6688 |
| 6755 | 6776 | 6793 |
| 6801 | 6805 | 6898 |
| 6921 | 6944 | 7000 |
| 7010 | 7043 | 7044 |
| 7053 | | |

## பச்சிலைப்பள்ளி

கி/ப

| | | |
|---|---|---|
| 16 | 86 | 113 |
| 157 | 166 | 214 |
| 244 | 267 | 273 |
| 288 | 333 | 338 |
| 339 | 381 | 408 |
| 456 | 460 | 502 |
| 509 | 524 | 631 |
| 636 | 646 | 661 |
| 676 | | |

## வடமராட்சி கிழக்கு

யா/வ.கி.

| | | |
|---|---|---|
| 01 | 07 | 20 |
| 103 | 130 | 155 |
| 185 | 223 | 243 |
| 313 | 314 | 404 |
| 505 | 524 | 545 |
| 559 | 574 | 577 |
| 603 | 622 | 631 |
| 643 | 671 | 713 |
| 731 | 740 | 750 |
| 769 | 774 | 826 |
| 835 | 845 | 860 |

## கரவெட்டி

யா/க

| | | |
|---|---|---|
| 12 | 33 | 79 |
| 113 | 129 | 138 |
| 154 | 186 | 206 |
| 272 | 294 | 316 |
| 317 | 388 | 471 |
| 511 | 527 | 556 |
| 589 | 641 | 659 |
| 806 | 827 | 924 |
| 954 | 993 | 1032 |
| 1037 | 1039 | 1059 |
| 1133 | 1139 | 1144 |
| 1155 | 1184 | 1195 |
| 1197 | 1208 | 1246 |
| 1267 | 1291 | 1311 |
| 1315 | 1322 | 1361 |
| 1412 | 1444 | 1460 |
| 1476 | 1523 | 1558 |
| 1595 | 1614 | 1711 |
| 1725 | 1730 | 1775 |
| 1811 | 1815 | 1827 |
| 1829 | 1873 | 1879 |
| 1896 | 1907 | 1950 |
| 1952 | 1980 | 1991 |
| 2008 | 2010 | 2042 |
| 2081 | 2101 | 2106 |
| 2146 | 2151 | 2156 |
| 2166 | 2190 | 2224 |
| 2225 | 2278 | 2307 |
| 2320 | 2341 | 2435 |
| 2480 | 2487 | 2510 |
| 2560 | 2609 | 2623 |
| 2640 | 2653 | 2665 |
| 2703 | 2711 | 2721 |
| 2753 | 2776 | 2780 |
| 2910 | 2912 | 2960 |
| 2964 | 2984 | 3014 |
| 3045 | 3078 | 3080 |
| 3090 | 3095 | 3111 |
| 3145 | 3156 | 3163 |
| 3197 | 3212 | 3227 |
| 3231 | 3238 | 3242 |
| 3405 | 3437 | 3441 |
| 3442 | 3453 | 3484 |
| 3536 | 3545 | 3548 |
| 3550 | 3589 | 3590 |
| 3669 | 3697 | 3751 |
| 3758 | 3778 | 3798 |
| 3815 | 3833 | 3869 |
| 3876 | 3890 | 3969 |
| 3978 | 4007 | 4070 |
| 4080 | 4091 | 4112 |
| 4180 | 4316 | 4350 |
| 4364 | 4370 | 4380 |
| 4406 | 4536 | 4540 |
| 4544 | 4587 | 4599 |
| 4682 | 4702 | 4705 |
| 4719 | 4742 | 4759 |
| 4783 | 4791 | 4798 |
| 4817 | 4821 | 4834 |
| 4949 | 4956 | 4962 |
| 4994 | 5002 | 5019 |
| 5032 | 5043 | 5062 |
| 5077 | 5082 | 5084 |
| 5088 | 5124 | 5131 |
| 5190 | 5234 | 5258 |
| 5260 | | |

## பருத்தித்துறை

யா/பரு.

| | | |
|---|---|---|
| 10 | 55 | 90 |
| 91 | 132 | 143 |
| 149 | 151 | 191 |
| 204 | 216 | 246 |
| 248 | 292 | 420 |
| 432 | 440 | 443 |
| 503 | 508 | 555 |
| 558 | 564 | 579 |
| 637 | 646 | 649 |
| 666 | 734 | 762 |
| 779 | 822 | 855 |
| 925 | 934 | 949 |
| 1044 | 1053 | 1100 |
| 1119 | 1143 | 1151 |
| 1182 | 1192 | 1206 |
| 1208 | 1231 | 1232 |
| 1242 | 1319 | 1326 |
| 1379 | 1402 | 1485 |
| 1498 | 1520 | 1553 |
| 1559 | 1593 | 1723 |
| 1751 | 1754 | 1779 |
| 1795 | 1803 | 1806 |
| 1810 | 1816 | 1823 |
| 1918 | 1927 | 1938 |
| 1945 | 1957 | 1986 |
| 1997 | 2023 | 2024 |
| 2044 | 2051 | 2072 |
| 2170 | 2256 | 2259 |
| 2273 | 2289 | 2330 |
| 2352 | 2362 | 2375 |
| 2376 | 2400 | 2406 |
| 2425 | 2455 | 2613 |
| 2626 | 2671 | 2682 |
| 2685 | 2692 | 2713 |
| 2739 | 2780 | 2783 |
| — | 2803 | 2842 |
| 2851 | 2881 | 2892 |
| 2919 | 2982 | 2996 |
| 3009 | 3011 | 3019 |
| 3040 | 3051 | 3078 |
| 3084 | 3096 | 3147 |
| 3181 | 3186 | 3247 |
| 3260 | 3283 | 3293 |
| 3390 | 3449 | 3500 |
| 3501 | 3553 | 3572 |
| 3659 | 3666 | 3687 |
| 3699 | 3713 | 3734 |
| 3763 | 3792 | 3849 |
| 3871 | 3954 | 4069 |
| 4082 | 4102 | 4114 |
| 4122 | 4134 | 4153 |
| 4187 | 4218 | 4236 |
| 4297 | 4305 | 4315 |
| 4354 | 4366 | 4377 |
| 4414 | 4415 | |

(முற்றும்)

# இடம்பெயர்ந்தோருக்கு மேலும் 2 வார நிவாரணம்

சாவகச்சேரி, டிச 16

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ள மக்களுக்கு மேலும் இருவார உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

தற்சமயம் வழங்கப்பட்டு வரும் இருவார உலர் உணவு நிவாரணம் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் வழங்கி முடிக்கப்படும் என்றும் — அதன் பின்னர் மேலதிக இருவார நிவாரணம் வழங்கப் படும் என்றும் — புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

அரிசி, சீனி, மா, பருப்பு. பால்மா ஆகியன நிவாரணமாக வழங்கப்படும்.

(இ-3)

# படையினரின் அடுத்த நடவடிக்கை குறித்து திட்டம் வகுக்கப்பட்டுவிட்டது

## அனுருத்த கூறுகிறார்

கொழும்பு, டிச. 16

எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து விரிவான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நடந்த தேசிய பாதுகாப்பு நிதி அன்பளிப்பு வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட பகுதியிலும் ஏனைய பகுதிகளிலும் விரைவில் சிவில் நிர்வாகத்தை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

# தயக்கம் இனி ஏன்?

தன்மானத்தை வீட்டுக்குள் விட்டு வந்தவனே – ஏன்
தலை குனிந்து நிற்கிறாய், வெட்கமில்லையா?
உன் எதிரகாலம் பற்றி துக்கம் இல்லையா?
எதிரி உன்னை விருந்துக்கு அழைப்பானா சொல்
அப்படி ஒரு நினைப்பில் தான் உன் இருப்பா?
நீ கண்ணைத் திறக்கும் வரை உனக்கு
நிம்மதி இல்லை
இன்னும் மூடுவாயானால் அதுவே
நிரந்தரமாகும் - உண்மை
மறந்து கூட மூடுவது இனிமேல் ஆபத்து
சந்தியில் நீ நின்று சிரிக்கிறாய் இங்கே
உன் சந்ததியை எதிரி அழிக்கின்றான்
அதோ புகைஎன்று வேடிக்கை காட்டுகிறாய் நின்று
எரிவது உன்வீடு அதை மறக்கின்றாய்!
அழிவது எல்லாம் எங்கள் சொத்தடா - தம்பி
உண்மையை உணர்ந்து நிமிர்ந்து நில்லடா
எதிர் கொள்ள இன்னும் காட்டாதே தயக்கம்
அதுவே தரும் உனக்கு முழுமையான நிம்மதி
புலியணியில் இணைந்து கொள்
இழந்த பூமியை மீண்டும் மீள்!

— க. இ. சாந்தகுமார்

# மந்திகையில் கண் நோயாளர் வார்ட்

மந்திகை, டிச. 16

மந்திகையில் இயங்க ஆரம்பித்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை படிப்படியாக சிலவார்ட்டுகளை தனது நேரடி நிர்வாகத்தில் நடாத்த ஆரம்பித்துள்ளது.

மந்திகை மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் இதுவரை மெடிக்கல் கிளினிக் மாத்திரமே இயங்கிவந்தது. தற்போது தோல் நோய்க்கான கிளினிக்கும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அத்துடன் வார்ட் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கண் நோயாளர் வார்ட்டே தற்போது முதன் முதலா[illegible]

[இ-15]

# நம்பிக்கையீனம், சந்தேகம் இன அழிவுக்கு வழிவகுப்பு

## பெண்கள் அமைப்பு அறிக்கை

கொழும்பு, டிச. 16

''தென் இலங்கையில் பரவும் நம்பிக்கையீனம், சந்தேகம் என்பன இன அழிப்புக்கு வழிவகுக்கக் கூடும்.''

இப்படி சமாதானத்துக்கான பெண்கள் அமைப்பு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர்க் கலசாரம் எம்மை பாதித்து நிற்கின்றது. தென் இலங்கையில் பரவி வரும் நம்பிக்கையீனம், சந்தேகம் என்பன இனச்சுத்திகரிப்புக்கு வழிவகுக்கக்கூடும்.

பேச்சுவார்த்தைக்கு இரு தரப்பினரும் இணங்க வேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு முன்பாக, இடம்பெயர்ந்த சகல மக்களும் தமது பழைய இடங்களுக்குத் திரும்ப வழிசெய்யப்பட வேண்டும்.

போர்க் கால சாரத்தால் ஏற்படுத்தப்பட்ட மாறுபட்ட இன மக்களிடையே உள்ள சந்தேகப் பார்வைகள் நீக்கப்படும் வரை இனப்பிரச்சினைக்குத்தீர்வு ஏற்படமாட்டாது.

அரசியல் தீர்வு யோசனைகள் செயலுருவம் பெற எவ்வளவு காலத்தை எடுக்கும் என்பதும் கேள்விக்குறியே.

எனவே சமாதானத்துக்கான கலாசார சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது.

[இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

புதிய தகரப் பந்தல் மணவறை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் வே. வேல்முருகன், முந்திரிகைத் தோட்ட வளவு, மிருசுவில் தெற்கு அல்லது பாலசிங்கம் மாஸ்டர் கச்சாய் வீதி கொடிகாமம். (39508)

### தேவை

சூரிய மின்கலம் (SOLAR) வைத்திருப்பவர் யாராவது விற்க விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளவும். க. கிருபானந்தக் குருக்கள் கிராம்புவில், பருத்தித்துறை வீதி, சாவகச்சேரி. (39525)


இடம் பெயர்ந்தோருக்கு

# வறுமை நிவாரணம் வழங்குவது நிறுத்தம்

சாவகச்சேரி, டிச 16

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களில் வறுமை நிவாரண உணவு முத்திரை வைத்துள்ள குடும்பங்களுக்கு பொருள்களை வழங்குவது இடை நிறுத்தப்பட்டது.

வலிகாமத்தில் வறுமை நிவாரண முத்திரை வைத்திருந்தவர்கள் தற்போது இடம் பெயர்ந்துள்ளனர்.

அவர்களுக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரணம் தற்சமயம் வழங்கப்படுவதால் அவர்களது உணவு முத்திரைக்குப் பொருள்கள் வழங்கப் படமாட்டாது எனத்தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி வடமராட்சி பகுதிகளில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களுக்கே வறுமை நிவாரண உணவு முத்திரைக்குப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

## தொல்பொருள் ஊழியருக்கு சம்பளம் இல்லை

சாவகச்சேரி, டிச. 16

யாழ்ப்பாணம் தொல்பொருள் திணைக்கள ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் ஆறு மாதங்களாக வழங்கப்படவில்லை.

மே, ஜூன், ஜூலை மாதங்களுடன் ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான சம்பளங்கள் இதில் அடங்கும்.

ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான சம்பளத்தை முன்னாள் அரச அதிபர் அனுராதபுரத்தில் உள்ள திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-111)

## அரசின் தீர்வுத்திட்டம் பற்றிய

# ஐ. தே. கவின் நிலைப்பாடு ஞாயிறன்று வெளியாகும்

கொழும்பு, டிச. 16

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான தனது கொள்கை அறிவிப்பை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் ஞாயிறன்று வெளியிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஞாயிறன்று நடைபெறவுள்ள கட்சியின் வருடாந்தக் கூட்டத்தில் இனப்பிரச்சினை தொடர்பாக விவாதிக்கப்பட விருப்பதாகவும் —

கூட்டத்தின் முடிவில் கொள்கைப் பிரகடனத்தை தலைவர் ரணில் விக்கிரமசிங்கா வெளியிடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு தெரிவித்துள்ள தீர்வு யோசனைகளை ஏற்றுக் கொள்ளத் தக்கதான தீர்மானத்தை ஐ. தே. க இக் கூட்டத்தில் எடுக்குமா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று அவதானிகள் தெரிவித்தனர். (ஐ-3-6)


# உதயன்
## கிளை நிலையம்
## சாவகச்சேரி

வாசகர்கள், விளம்பரதாரர்கள்
செய்தியாளர்களே!
உங்கள் வசதி கருதி
எங்கள் கிளை நிலையம்
சாவகச்சேரி நவீன சந்தை
மேல்மாடி 9 ஆம் இலக்கத்தில் இயங்குகிறது

★ செய்தி ★ விளம்பரம்
★ பத்திரிகை விநியோகம்

காலை 8. 30 மணி முதல் மாலை 6 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.


## தோட்டத்தில் குண்டு வெடிப்பு: தமிழர் பலி

கொழும்பு, டிச. 16

தெனியாய தோட்டப் பகுதியில் தெவுலமியவ என்ற இடத்தில் லயத்தில் குண்டு ஒன்றுவெடித்ததில் தமிழரான தோட்டத் தொழிலாளி கொல்லப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30 மணியளவில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பில் சத்தியசீலன் என்பவரே கொல்லப்பட்டவராவர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த இருவர் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## தொழுநோய் சிகிச்சை

சாவகச்சேரி, டிச. 16

தொழுநோயாளர்களுக்கு மாதம் தோறும் 3 ஆம் 4 ஆம் செவ்வாய்க்கிழமைகளில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சிகிச்சை அளிக்கப்படும்.

தோல் நோய் சிகிச்சை செவ்வாய்க்கிழமைகளில் புலோலி மாவித்தியால சிகிச்சை நிலையத்தில் நடைபெறும். (இ-15)

## உயிரிழந்தோர் குடும்பத்துக்கு ரூ. 2 ஆயிரம்

வடமராட்சி, 16

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சமீபகால அனர்த்தங்களினால் மரணமடைந்தோரின் குடும்பங்களுக்கு மரணக் கொடுப்பனவாக தலா இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

இது வரைகாலமும் அனர்த்தங்களினால் மரணமானோரின் மரணச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்காத, அவர்களின் குடும்பத்தினர் உடனடியாக, மரணச் சான்றிதழ்களை பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து மரணக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவ[illegible] [illegible]. (ஐ-15-173)


## உடன் சந்திக்கவும்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் கமால் வீதியில் வசித்தவருமான

கணேசன் தனலக்ஷ்மி என்பவர் சட்டநாதர் சதாசிவம் அவர்களைப் பின்வரும் விலாசத்தில் உடன் சந்திக்கவும்.

திரு. சட்டநாதர் சதாசிவம்
C/o திரு இ. தம்பையா
மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (39524)

## தாலிக்கொடி தவறிவிட்டது

கோபாலகிருஷ்ணன் கமலாதேவி என்பவருடைய தாலிக்கொடி தாலியுடன் பெரிய மாவடி வீதியில் வீட்டின் முன்னால் 14-12-95 மாலையில் தவறிவிட்டது.

எடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும்

சன்மானம் வழங்கப்படும்

ச. துரைச்சாமி
மே/பா க. ரத்தினம்
பெரிய மாவடி, சாவகச்சேரி. (39637)


# வைப்பகத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளோர்

சாவகச்சேரி, டிச. 16

கீழ்க் குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு நாளை ஞாயிறு காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

★ சிவஞானம் மஞ்சு— மணற்பகுதி, ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

★ சிவலிங்கம் பூபதி — ஆஸ்பத்திரி வீதியடி, சங்கானை கிழக்கு, சங்கானை.

★ சி. நடராஜா — வேதக்கோயில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ நடராஜா ரவீந்திரராஜா — செல்வநாயகம் வீதி, கோண்டாவில்.

★ வைரவி கந்தையா இராசமலர் — பாவலர் துரையப்பா வீதி, தெல்லிப்பளை.

★ ஸ்ரனிஸ்லாஸ் மேரி சுசிலா — சந்தை வீதி, சங்கானை.

★ தாவிதுராஜா பாக்கியம் — உரும்பராய் கிழக்கு, உரும்பராய்.

★ தே. சாந்தகுமாரி — இல. 133, 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.

★ சுப்பிரமணியம் வேலாயுதபிள்ளை — 17/1, புகையிரதநிலைய வியூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

★ பொன்னையா — சந்திரசேகரி, மே/பா. மேஜர் செல்வராசா வீதி, கோண்டாவில் மேற்கு. கோண்டாவில்.

★ திருமதி வவா குணரத்தினம் — 11/22, சாஸ்திரியார் லேன், கனகரட்ணம் றோட், அரியாலை.

★ திருமதி கமலாதேவி தியாகராஜா — 172/1, கண்டி வீதி, அரியாலை.

★ திருமதி அருள் துரைச்சாமி — 50, அருளம்பலம் வீதி, அரியாலை.

★ எஸ் கே. ராஜரட்ணம் — 84/1, ஏ.வி. றோட், அரியாலை. (ஐ)

## வடமராட்சிப்பகுதியில்

# 10 நாள்களில் 90 பேர் மண்மீட்பில் இணைந்தனர்

வடமராட்சி, டிச. 16

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் கடந்த 10 நாள்களில் 90 பேர் மண்மீட்புப் போரில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

இவர்களில் அதிக எண்ணிக்கையானோர் இளைஞர், யுவதிகளாவர்.

பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி பிரதேசசெயலர் பிரிவுகளில் இருந்தே இப் புதிய போராளிகள் இணைந்துள்ளதாக வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தின் புள்ளி விவரங்களில் தெரியவந்துள்ளது (ஐ-173)

# பெற்றோரைத் தேடி ஏங்கும் புலனிழந்த 16 சிறார்கள்

கைதடி, டிச. 16

கைதடி ''நவீல்ட்'' செவிப்புலன், விழிப்புலன் வலுவிழந்தோருக்கான பாடசாலையில் தங்கி கல்வி பயின்று வந்த பத்து மாணவர்கள் தமது பெற்றோரின் தொடர்பை இழந்து பரிதவிக்கின்றனர்.

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் போது இவர்களது பெற்றோர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

தமது பெற்றோர்கள் என்ன ஆனார்கள் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியமுடியாது இவர்கள் தவிப்பதாக 'நவீல்ட்' பாடசாலையின் அதிபர் திரு. கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த வேறு ஆறு மாணவர்களும் தமது பெற்றோரிடம் செல்ல முடியாத நிலையிலுள்ளனர்.

தற்போது இந்தப் பாடசாலை விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளது (ஐ-7)

## வயிற்றோட்டம்

# குழந்தைகள்- வயோதிபரே பெரும் அளவில் பாதிப்பு

தென்மராட்சி, டிச. 15

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் வயிற்றோட்ட நோய் வேகமாக பரவி வருவதாக வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வயிற்றோட்டம் காரணமாக தினமும் 75 பேருக்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர். 25 பேர் வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களிலும், நலநோம்பு நிலையங்களிலும் தங்கியுள்ள ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளும் வயோதிபர்களுமே வயிற்றோட்ட நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி மந்துவிலைச் சேர்ந்த சு.ராசம்மா (வயது 62] என்பவர் வயிற்றோட்ட நோய் காரணமாக மரணமானார். [இ-117]

## 6 தமிழர் கைது

கொழும்பு, டிச. 16

கொழும்பு இராணுவ தலைமையக வாயில் மற்றும் கொம்பனித் தெரு ரயில் நிலையம் ஆகிய பகுதிகளில் சமீபத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்புக்கள் தொடர்பாக 6 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் தடுத்து வைத்து விசாரிக்கப் படுகின்றனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். [இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மன உறுதி வேண்டும்

யாழ்ப்பாணத்துக்கு — வலிகாமத்துக்கு — திரும்பி வருமாறு இடம்பெயர்ந்த அப்பகுதி மக்களை அரசாங்கம் செயல் ரீதியாக அழைக்கத் தொடங்கிவிட்டது.

புனர்வாழ்வு, புனரமைப்பு, வாழ்க்கை வசதிகள் என்று ஆசை வார்த்தை கூறி தமிழர்களை தனது வலைக்குள் இழுத்துவிட முடியாது என்பதனை சந்திரிகா தெரிந்துகொண்டு விட்டார். தனது மாய்மாலத்தைத் தமிழர்கள் உதாசீனம் செய்கிறார்கள் என்பதனைப் புரிந்துகொண்டுவிட்டார்.

அதனால் இடம்பெயர்ந்த மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பணம், உணவு, மருந்து போன்றவற்றைத் தடை செய்து மக்கள் மீது அழுத்தம் போடும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார்.

யாழ்ப்பாண நகரத்தில் உள்ள அரச ஊழியர்களுக்கு மட்டுமே டிசம்பர்ஜனவரிமாத சம்பளங்கள் வழங்கப்படும் என்பது அரச அழுத்தங்களின் தொடக்கம். அதாவது யாழ்ப்பாணம் சென்றால் தான் வலிகாமத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் சம்பளம் பெறலாம் என்ற பொறி வைக்கப்படுகிறது.

இந்தப் பொறிக்குள் வலிகாமம் அரச ஊழியர்கள் விழவில்லையெனில், இடம்பெயர்ந்த மக்களுக்கு அனுப்பும் உணவைச் சரி அரைவாசியாகக் குறைத்துவிடும் மாற்றுத் திட்டம் ஒன்றையும் சந்திரிகா வைத்திருக்கிறார்!

கடந்த வாரம் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், 1981 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு, குடாநாட்டு மக்களின் சனத்தொகை மூன்று லட்சத்து எண்பதாயிரம் என்று கணக்குக் காட்டினார்; இல்லை கணக்குவிட்டார்!

வலிகாமம் மக்கள் மீது நெருக்குதல்களையும், அழுத்தங்களையும் ஒவ்வொன்றாக அடுத்தடுத்துப் போட்டு அவர்களை இராணுவப் பிடிக்குள் சிக்கவைத்துவிடச் சந்திரிகா சூழ்ச்சி செய்கிறார். வலிகாமம் மக்களை வலிந்திழுக்க மேலும் பல தந்திரங்களைக் அவர் கையாள்வார் என்பது நிச்சயம்.

ஆகையால் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இதற்கு முதல் எப்போதும் இல்லாதவாறு மிகவும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

இன்றைய நெருக்கடியான நிலையைப் பயன்படுத்தி, தமிழ் மக்கள் மீது அழுத்தங்களைப் போட்டு, நெருக்குதல்களைக் கொடுப்பதோடு நிற்காமல், அவர்களின் மனதை மாற்றுவதற்கு, உளவியல் போரையும் அரசு தீவிரமாகவும், வேகமாகவும் முடுக்கிவிடும். உளவியல் போரின் முக்கிய ஆயுதமாக பொய்ப் பிரசாரத்தையே ஏவிவிடும்.

எனவே வலிகாமம் மக்கள் அரசின் அழுத்தங்களுக்கு ஆட்படவோ, பொய்ப் பிரசரங்களுக்கு எடுபடவோ கூடாது. சந்திரிகா வைக்கும் மரணப் பொறிகள் குறித்துக் கவனமாக இருக்க வேண்டும் அவற்றில் சிக்காமல் தாம் ஈட்டிய அரசியல் பலத்தை உறுதிப்படுத்த மன உறுதி கொள்ள வேண்டும். அதுவா இதுவா என்று மனச்சலனம் கொள்வது முற்றாகத் தவிர்க்கப்படவேண்டும்.

# வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் உள்ள
# பகுதியை பாதுகாப்பு வலயமாக்க அரசு முயற்சி

### புலிகள் தாக்கலாம் என அச்சம்

கொழும்பு, டிச. 16

கொழும்பு, பௌத்தலோக மாவத்தையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுயாதின தொலைக்காட்சி நிலையம் ஆகியவற்றுக்கு அண்மையில் உள்ள பகுதிகளை பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப் படுத்துவதற்கு அரசு கவனம் செலுத்துகிறது.

இது சம்பந்தமாக ஆராய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளது.

தொடர்பு சாதன, சுற்றுலா, விமானத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்த தகவலில், இந்த முக்கிய நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது குறித்து அவற்றின் பொறியியலாளர்கள், ஊழியர்களிடம் இருந்து ஆலோசனைகளை வரவேற்பதாகத் தெரிவித்தார்.

இதற்கிடையில் கொழும்பினதும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளினதும் பாதுகாப்பு குறித்து விழிப்பாக இருக்க வேண்டியதன் அவசியத்தை பொலீஸார் வலியுறுத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் முற்றாகக் கட்டுப்படுத்தப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பிரதி பொலீஸ் மா அதிபர் டி.எம்.டி. திஸநாயக்க பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோளில், சந்தேகநபர்களின் நடமாட்டம், சந்தேகத்துக்குரிய பொருள்கள், அதேசமயம் கொழும்பு நகரிலும், அடுத்துள்ள பகுதிகளிலும் குண்டு வெடிக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து கவனமாக இருக்குமாறு கேட்டுள்ளார்.

கொழும்பிலும், அதை அடுத்துள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வெளியூர்களில் இருந்தும், வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்தும் வரும் வாகனங்கள் கொழும்பில் பொலீஸாரால் கடுமையாக சோதனையிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

### புலிகளின் செயற்பாடுகள் குறித்து

# நோர்வேத் தூதுவரை அழைத்து வெளிவிவகார அமைச்சு விசாரணை

சாவகச்சேரி, டிச. 16

நோர்வேயில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் குறித்து விசாரணை செய்வதற்காக கொழும்பில் உள்ள நோர்வே நாட்டுத் தூதுவர் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டார்.

நோர்வேயில் புலிகள் நிதி சேகரிப்பதாக, கொழும்புப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியானதை அடுத்தே நோர்வேத் தூதுவர் ஒஸ்கார் ஒஸ்கார்சொன் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

நோர்வேயில் உள்ள தமிழ் இணைப்புக்குழு நோர்வேயில் 85 லட்சம் ரூபாவை சேகரித்து விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியதாக நோர்வேயில் உள்ள விடுதலைப் புலிகள் பிரமுகர் ராஜன் செல்லையா நோர்வே பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இதனை ஆதாரமாகக் கொண்டே பிரஸ்தாப கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. (இ)

# டிசம்பர் சம்பளத்தை பணமாக வழங்க வங்கிகளின் உதவியைப் பெற முயற்சி

சாவகச்சேரி, டிச. 16

டிசப்பர் மாதச் சம்பளத்தை பணமாக வழங்குவதற்குத் தேவையான திரவப் பணம் குறித்து யாழ். மாவட்ட திணைக்களங்கள், வங்கிகளின் உதவியை நாட உள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள், தாம் கணக்கு வைத்திருக்கும் வங்கிகளின் தலைவர்களுக்கு இது தொடர்பான கோரிக்கையை அனுப்பவிருக்கின்றன.

யாழ். செயலகத்தில் அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் நேற்று நடந்த கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்டது.

வங்கித் தலைவருக்கு அனுப்பும் கடிதத்தின் பிரதி யாழ். அரச அதிபருக்கும் அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ 3-7)

## தெற்கில் புத்தாண்டு கொண்டாட்டம் ரத்து

கொழும்பு, டிச. 16

தெற்கில் உள்ளவர்கள் தமது புத்தாண்டு கொண்டாட்டங்களை ரத்துச்செய்துவிட்டு அந்த நிதியை தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்கி வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை தீவிரமாக்க அதற்கு தேவையான நிதியை வழங்கும் நோக்குடன் தெற்கில் உள்ள அமைப்புக்களும். பொதுமக்களும் தமது புத்தாண்டு நிகழ்ச்சிகளை ரத்துச் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தவகையில் சேகரிக்கப்பட்ட 25 லட்சம் ரூபா நிதி நேற்று முன்தினம் பிரதி பாதுகாப்பு அமைச்சர்கேணல் அனுருத்த ரத்வத்தையிடம் கையளிக்கப்பட்டதாம்.

## மதுபான கடைக்குள் புகுந்த திருடர்

தென்மராட்சி, டிச. 16

சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்று திருடர்களின் கைவரிசைக்கு உள்ளாகி இருக்கிறது.

கடந்த செவ்வாய்க் கிழமை கடையின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் சாராயத்தைச் குடித்து விட்டு கடைக்குள் இருந்து ரூ. 26 ஆயிரத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-117)

## வங்கி காசோலைகள்

சாவகச்சேரி, டிச. 16

மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் சகல கிளைகளிலும் சகல வங்கிக் காசோலைகளும் எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் ஏற்று கொள்ளப்படும் என்று அரச அதிபர் தெரிவித்ள்ளார்.

அந்த, அந்த வங்கிக் காசோலைகள் அந்த அந்த வங்கிகளில் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-7)

## ஹேமாவின் அந்தரங்க வெளிநாட்டுப் பயணம்

கொழும்பு, டிச. 16

தற்போது வெளிநாட்டில் உள்ள காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பாரியார் ஹேமா பிரேமதாச விரைவில் நாடு திரும்ப இருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வெளிநாடு ஒன்றில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் ஹேமா பிரேமதாசவின் நடமாட்டங்கள் பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக மிகவும் அந்தரங்கமாகவே வைக்கப்பட்டுள்ளனவாம்.

சிறிய அறுவைச் சிகிச்சை ஒன்றுக்காகவே ஹேமா மேற்காசிய நாடு ஒன்றுக்குச் சென்றார் என்றும் —

பாதுகாப்புப் பிரச்சினை காரணமாகவே அவர் கொழும்பில் சிகிச்சை பெற [illegible] என்றும் 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது (இ)

## தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு நடைமுறைகள்

தமிழீழ மீட்பு நிதிக் கடனில் 1995 ஆம் ஆண்டு மீளளிப்புக்காக மூவாயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது. மீட்புநிதிக் கடன் வழங்கப்படும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

மீளளிப்பு நடைமுறைகளை நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். விவரம் வருமாறு:

★ 1) மீளளிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் கடன் பத்திரத்தை வைத்திருப்பவர்களுக்கான மீளளிப்பு முதற்கட்டமாக நடைபெறும்.

2) கடன் பத்திரத்தை தவறவிட்டவர்களுக்கு மீளளிப்பு இரண்டாம் கட்டமாக நடைபெறும் இது தொடர்பான நடைமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும். இதனை தயவுசெய்து கருத்திற் கொண்டு எம்முடன் முழுமையாக ஒத்துழைக்குமாறு கடன் பத்திரத்தை தவறவிட்டவர்களை பணிவன்புடன் வேண்டுகிறோம்.

★ கடன் பத்திரதாரர்கள் நேரடியாக வருகைதந்து கடனை மீளப்பெற வேண்டும்.

★ ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகை தர வேண்டும்.

★ கடன் பத்திரதாரர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களை பின்னுரித்தாளர் கொண்டு வர வேண்டும்.

1) இறப்புச் சான்றிதழ்.
2) இறப்புச் சான்றிதழின் பிரதி.
3) பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்.
4) பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.
5) கடன் பத்திரம்.

★ கடன் பத்திரத்திலுள்ள முழுப்பெயரும், அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

★ 1) மீளளிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர்கள் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.

2) அடையாள ஆவணம் அற்றவர்கள் தமது புகைப்படத்தை (2.5 அங் x 2 அங் அளவு) அதன் பின்புறத்தில் தமது பெயர் முகவரி கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுத்திப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

3) இவ்வாறு செய்ய முடியாதவர்களுக்கான மீளளிப்பு கடன் பத்திரத்தைத் தவறவிட்டவர்களுக்கான இரண்டாம் கட்ட மீளளிப்பின் போது மேற்சொள்ளப்படும். இது பற்றிய நடைமுறை பின்னர் அறிவிக்கப்படும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை உடன் நிறுத்தி புலிகளுடன் பேசுக

## சர்வதேச தொழிற்சங்கம் வற்புறுத்து

சாவகச்சேரி, டிச. 16
உங்கள் நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையை நடத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் காணுங்கள். போரை நிறுத்துங்கள்.

இவ்வாறு ''எடியுகேஷன் இன்ரநாஷனல்'' என்ற சர்வதேச ஆசிரியர்கள் சங்கம் ஜனாதிபதி சந்திரிகாவைக் கேட்டுள்ளது.

140 நாடுகளைச் சேர்ந்த 2 கோடி 30 லட்சம் ஆசிரியர்களையும் கல்வி ஊழியர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் இந்த அமைப்பின் செயலாளர் நாயகம் திரு. பிரெட் வான் லீயுவென் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இது தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அரசாங்கம் போரை நடத்துவதால் தமிழர்களுக்கும் தமிழ் அசிரியர்களுக்கும் ஏற்பட்டுள்ள இன்னல்களை விளக்கி, 'எடியுகேஷன் இன்ரநாஷனல்' அமைப்பின் அங்கத்துவத் தொழிற்சங்கமான அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கம் நடத்தும் போரினால் லட்சக்கணக்கான தமிழர்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்கின்றார்கள். உணவு, மருந்து வகைகளுக்கு உங்கள் அரசு தடை விதித்துள்ளதால்; மக்கள் பட்டினியாலும் நோய்களாலும் அவதியுறுகிறார்கள்—

மக்கள் குடியிருப்புகள், கோவில்கள், தேவாலயங்கள், ஆஸ்பத்திரிகள் மீது படையினர் நடத்தும் குண்டு வீச்சுக்கள், ஷெல் தாக்குதல்களால் பெரும் எண்ணிக்கையான அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் உடல் ஊனமுற்றுள்ளனர்; காயமடைந்துள்ளனர்.—

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது போரை நிறுத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் காணப்போவதாகக் கூறியிருந்தீர்கள். அதனை உங்களுக்கு ஞாபகப்படுத்தி போரை உடன் நிறுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்— என்று 'எடியுகேஷன் இன்ரநாஷனல்' ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறது.

இந்தக் கடிதத்தின் பிரதி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளருக்கு தகவலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. (அ)

## புக்காரா தாக்குதலுக்கு உள்ளானவர் மரணம்

வடமராட்சி, டிச. 16
புக்காரா குண்டு வீச்சுத் தாக்குதலால் படுகாயமடைந்த எட்டு மாதக் கர்பிணிப் பெண்ணான ரதிதேவி புஸ்பராசா (வயது 27) ஒன்றரை மாதத்தின் பின் நேற்றுக் காலை மரணமானார்.

கடந்த ஒக்டோபர் 29 ஆம் திகதி ஆனைக்கோட்டை சாவற்காட்டுப் பகுதியில் 'புக்காரா நடத்திய குண்டுத் தாக்குதலில் இவர் குடல் வெளியேறிய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கருவில் இருந்த 8 மாத சிசுவும், இவரது 5 வயதுப் பெண் குழந்தையான செல்லா என்பவரும் மரணமாகியிருந்தனர்.

கருவிலுள்ள சிசு மரணமான போதிலும் இவர் யாழ். போதனா வைத்தியசாலையிலும், மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலையிலும் தொடர்ந்து சிகிச்சை பெற்றார்.

இருந்தும் நேற்றுக் காலை மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இவர் மரணமானார்.

(இ-173)

## புலிகள் கடத்திய வாகனங்களில் குண்டுகளாம்

விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ள பஸ்கள் உட்பட சில வாகனங்களில் குண்டுகள் பொருத்தப்பட்டு —

அந்த வாகனங்கள் தற்கொலைப் படையினருடன் கொழும்புக்குள் வர வாய்ப்பு இருப்பதாக சிரேஷ்ட பொலீஸ் பேச்சாளர் ஒருவர் நேற்று ''தினமின''வுக்குத் தெரிவித்தார். (இ-3-6)

## இளம் டாக்டர் மரணம்

யாழ். போதனா வைத்தியசாலை உள்ளகப் பயிற்சி டாக்டர் ஒருவர் நேற்றுக் காலை மந்திகையில் உள்ள யாழ். போதனா வைத்தியசலையில் மரணமானார்.

ஆறுமுகம் சசிகாந்தன் [29வயது] என்ற இந்த இளம் டாக்டர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

கடந்த ஒரு மாத காலமாக நோய் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். மரணத்துக்கு செப்ரிசிமியா காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-173]

## மீட்பு நிதி கோப்பாய் பிரிவு

நேற்றைய உதயனில் வெளியான மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு பெறுவோரின் கடன் பத்திர இலக்கங்களில் —

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுக்குரிய இலக்கங்களில் ஐம்பத்திநான்காவது வரியில் உள்ள 5359 என்பதை 6359 என்று திருத்தி வாசிக்கவும்.

## மரண அறிவித்தல்கள்

### டாக்டர் ஆறுமுகம் சசிகாந்தன்

கில்னர் லேன், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட Dr. ஆறுமுகம் சசிகாந்தன் [யாழ். போதனா வைத்தியசாலை] நேற்று [15 - 12 - 95] வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் ஆறுமுகம் - நாகபூசனி தம்பதிகளின் புதல்வரும், சசிதரன் [பொஸ்சுவானா], மந்தாகினி, சுபாங்கினி ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று [15 - 12 - 95] வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு எள்ளங்குளம் மயானம், உடுப்பிட்டியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. சு. ஆறுமுகம்
[தந்தை]

மே/பா சி. மனோன்மணி,
''திருவாதனி''
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.
[39526]

### வேலுப்பிள்ளை சபாரத்தினம்

(பூநகரி விதானையார்)

கண்டி வீதி, மீசாலையை சேர்ந்த வேலுப்பிள்ளை சபாரத்தினம் (முன்னாள் பூநகரி விதானையார்) நேற்றுக் காலமானார்.

இவர் சொர்ணம்மாவின் அன்புக் கணவரும், கந்தசாமி [நெடுங்கேணி], மனோன்மணி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் சகோதரரும், கமலராணி, சந்திரகுமாரன் [இலங்கை வங்கி, சாவகச்சேரி], சிவகுமாரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற பரமசாமி, மற்றும் செல்வரேணுகா, ரேவதி ஆகியோரின் மாமனாரும், துவாரகா, கார்த்திகா, யசோதா, கிரிஷா, பிரகாஷ், காயத்திரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [16-12-95] காலை 10. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S. சந்திர மாரன்
[மகன்]
[39528]

### கணபதிப்பிள்ளை - சிவசுந்தரம்

(முன்னாள் மாநகர சபை அத்தியட்சகர் - யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை – சிவசுந்தரம் 15 – 12 - 95 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், Dr. ரமணன் (காசல் வைத்தியசாலை — கொழும்பு), மதுமதி (மொறட்டுவை பல்கலைக்கழகம்), சுகர்ணன் (பல்கலைக்கழகம் — யப்பான்), கர்ணன் (யப்பான்), சுமதி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-12-95) பகல் 12 மணியளவில் நுணாவிலில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி கனகாம்பிகை
(மனைவி)

தற்போதைய முகவரி:
''லக்சுமி வாசா''
நுணாவில் கிழக்கு
நுணாவில்.
(39531)

## வன்னிக்கு செல்லும் கைத்தொழில் நிறுவனங்களுக்கு உதவி கிடைக்கும்

வன்னி செல்லும் கைத்தொழில் நிறுவனங்களுக்கு தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் உதவிகள் அளிக்க உள்ளது.

இது தொடர்பாக பிரஸ்தாப நிறுவனத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போதைய நெருக்கடிகளால் அனைத்துக் கைத்தொழில்களும் செயலிழந்து முடக்கப்பட்டுள்ள நிலையில், இடம்பெயர்ந்த மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவும், செயலிழந்த கைத்தொழில்களை மீள இயங்க வைக்கவும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் அனைத்து உதவிகளையும் செய்ய முன்வந்துள்ளது.

பெருநிலப்பரப்பிற்குச் சென்று கைத்தொழில்களை ஆரபிக்க ஆர்வமுள்ளோருக்கு குறைந்த செலவில் பொருள்களை ஏற்றி இறக்க வசதிகள் செய்து கொடுக்கவும், தொழிற்சாலைகளுக்கான இடவசதி செய்து கொடுக்கவும் மாங்குளத்திற்குச் சமீபமாக ஒட்டுசுட்டான் பகுதியில் கைத்தொழில்களை ஆரம்பிப்பவர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பீடித்தொழில், சுருட்டுத் தொழில், தும்புத் தொழில், நல்லெண்ணெய் ஊற்றல் போன்ற குடிசைக் கைத்தொழிலாளர்களுக்கும் வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

எனவே இது தொடர்பான விவரங்களைப் பெற பதிவு செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் புதிதாகக் கைத்தொழில்களை ஆரம்பிக்க ஆர்வமுள்ள முதலீட்டாளர்களையும் கொடிகாமம் கச்சாய்வீதியிலுள்ள தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்துடன்' தொடர்பு கொள்ளுமாறு தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் கோருகிறது

[இ]

## 2 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இதுவரை வன்னிக்குச் சென்றனர்

சாவகச்சேரி, டிச. 16
வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியிருந்த வலிகாமம் மக்கள் நாளாந்தம் அதிக அளவில் வன்னிப் பிரதேசத்துக்குச் செல்கின்றனர்.

இம்மாத நடுப்பகுதிவரை ஐம்பதாயிரம் குடும்பங்களை சேர்ந்த இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இவ்வாறு வன்னிப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இடம் பெயர்ந்து வன்னிப் பகுதிக்குச் செல்லும் மக்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பராமரிப்பிலுள்ள 69 நலனோம்பு நிலையங்களில் தங்கவைக்கப்படுகின்றனர்.

இவ்வாறான நலனோம்பு நிலையங்களில் கிளிநொச்சியில் 39 ம் — வவுனியாவில் 4 ம் —, முல்லைத்தீவில் 19ம் —, மன்னாரில் 7ம் இயங்குகின்றன.

நலனோம்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் நலன் கருதி ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இடம் பெயர்ந்தோர் நலன் காக்கும் நிலையங்களை தமிழர்புனர்வாழ்வுக்கழகம் அமைத்துள்ளது.

இந்த நிலையங்களின் மூலம் நலனோம்பு நிலையங்களிலுள்ளவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டுவருகிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையும் இந்த இடம்பெயர்ந்தோர் நலன் காப்பு நிலையம் ஒருங்கிணைத்து பெற்று அம்மக்களுக்கு வழங்குவதுடன் மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும்கவனித்து வருகின்றது. (இ-7)

### தமிழ் எம்.பிக்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எழுப்பியுள்ளர்.

உலகின் கண் முன்னே இலங்கை அரசின் கொடுமைகளை அம்பலப் படுத்த இதை விடச்சிறந்த வழி வேறு எதுவும் இருக்க முடியாது.

எனவே நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் தூக்கி எறிந்து விட்டு வெளியே வரவேண்டும் என்று அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்

(இ-3)

### படைமுகாம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் கடல்கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் --- பாதுகாப்பு [illegible] தெரிவித்ததாக அத்தெசய்தியில் கூறப்பட்டுள்ளது.

(இ-3)

### ஸ்ரீலங்காவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இலங்கை வங்கிக் கிளையை இழுத்து மூட இவர்கள் முயன்றபோது பொலீஸார் தலையிட்டுத் தடுத்தனர் என்றும் —

எனினும் சுமார் ஐம்பது இளைஞர்கள் வங்கியின் பின் வாசலால் வங்கிக்குள் நுழைந்து விட்டனர் என்றும் —

இவர்களை வெளியேற்ற பொலீஸார் வங்கிக்குள் வந்து தடியடி நடத்தினர் என்றும் வெரித்தாஸ் தெரிவித்தது.

(அ-இ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 16-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org